செய்தி வெளியீடு எண். 67 நாள். 21.01.2011

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு**

**"மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில்களுக்கு ஒலி ஒளிக் காட்சிகள் அமைத்தல்"**

2010–2011–ஆம் ஆண்டிற்க்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது தமிழக சட்டப் பேரவையில் 12.05.2010 அன்று மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மற்றும் இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி ஆகிய திருக்கோயில்களில் ஒலி ஒளி காட்சிகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2. மேற்படி அறிவிப்பின்படி மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஒலி, ஒளிக் காட்சிகள் ரூபாய் ஒரு கோடியே 67 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் ஒலி, ஒளிக் காட்சிகள் ரூபாய் ஒரு கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்விரு திருக்கோயில்களுக்கும் ரூ.3.07 கோடி மதிப்பீட்டில் ஒலி மற்றும் ஒளிக் காட்சிகள் அமைக்க தேவையான மின் அமைப்புகள் விரைவில் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.